**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.**5/2015

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ஆம் நாள் **வா.சா.1** சாட்சி **திரு. ராமசாமி** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திரு.ராமசாமி** | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**வா.சா. : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

08.10.1998 2-ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 1-ம் பிரதிவாதியால் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் (Barred by limitation எனவே ஆட்சேபனை செய்யப்படுகிறது) **வா.சா.ஆ.1** ஆகவும், 24.03.1999 தேதிய 1-ம் பிரதிவாதி சார்பாக நான் 1-ம் பிரதிவாதி வங்கிக்கு செலுத்திய வட்டி ரசீது ஆவணம் (forsed document எனவே ஆட்சேபனை செய்யப்படுகிறது)**வா.சா.ஆ.2** ஆகவும், 15.05.2000 தேதிய வாதியும் 1-ம் பிரதிவாதியும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட கூடுதல் சப்ளிமெண்டரி ஒப்பந்தம் forsed document எனவே ஆட்சேபனை செய்யப்படுகிறது) **வா.சா.ஆ.3** ஆகவும், 23.12.2002 தேதிய சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவகத்திய தான செட்டில்மெண்ட் ஆவணம் 4048/2002 **வா.சா.ஆ.4** ஆகவும், 28.07.2014 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.5** ஆகவும், 02.08.2014 தேதிய அறிவிப்பின் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.6** ஆகவும், 04.08.2024 தேதிய திருப்பப்பட்ட தபால் உறை **வா.சா.ஆ.7** ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.<br><br>சார்பு நீதிபதி,<br>சத்தியமங்கலம். |

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள். 19.11.2024